**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF JUDGE.**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**
**O.S. NO.75/2023**

Deposition of the witness: DW1.
Date :10.06.2026

Solemnly affirmed by Mrs.R. Sathya Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | உதயகுமார் |
| Father's Name | மால் நாடார் |
| Village | நீண்டகரை பி கிராமம் |
| Taluk | அகஸ்தீஸ்வரம் |
| Calling | |
| Age | 66 |

## முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இந்த வழக்கில் 4 ம்பிரதிவாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு நான் எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| பி.வாசா.ஆ.1 | 19.10.1987 | மால் நாடார் பெயரிலான கிரய ஆவண எண்.1223/1987 | சான்றிட்ட நகல் |
| பி.வாசா.ஆ.2 | 09.12.1987 | மால் நாடார் பெயரிலான அடமான ஆவண எண்.1421/1987 | சான்றிட்ட நகல் |
| பிவா.சா.ஆ.3 | 02.09.1993 | அழகேசன் பெயரிலான அடமான மேடவர் ஆவண எண்.1558/1993 | சான்றிட்ட நகல் |
| பிவா.சா.ஆ.4 | 20.02.2015 | மால் நாடார் பெயருக்கு அழகேசன் எழுதிக்கொடுத்த ரசீது | சான்றிட்ட நகல் |
| பிவா.சா.ஆ.5 | | STR No.6072/1987 படியான நாகர்கோவில் வட்டாட்சியர் | ஒளி நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகத்தில் இருந்து மால் நாடாருக்கு அனுப்பட்ட அறிவிப்பு | |
| பிவாசாஆ.6 | | புல எண் 1090/1 ற் கான வரைபடம் | நகல் |
| பிவாசாஆ.7 | 23.12.2022 | மால் நாடாரின் இறப்பு சான்றிதழ் | அசல் |
| பிவாசாஆ.8 | 02.05.2023 | தீர்வை ரசீது | ஒளி நகல் |
| பிவாசாஆ.9 | 28.03.2026 | புல எண் 1076/9 ற்கான 01.01.1987 முதல் 14.10.2018 வரையிலான காலகட்டத்திற்குரிய வில்லங்க சான்று | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| பிவாசாஆ,10 | 28.03.2026 | புல எண்1090/1 ற்கான 01.01.1987 முதல் 14.10.2018 வரையிலான காலகட்டத்திற்குரிய வில்லங்க சான்று | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| பிவாசாஆ,11 | 05.01.2022 | இராஜக்காமங்கலம் காவல் நிலைய குற்றவியல் புகார் எண்.4/2022 | ஒளி நகல் |

பிவாசாஆ 10 ,11 ஆவணங்கள் பற்றி சாட்சி நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் ஒளிநகல் என்றும் வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டு தொலைந்து போனதால் அதன் நகல் தாக்கல் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டது. மேற்படி ஆவணங்கள் அசல் எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டு அது தொலைந்து போனது என்பதை பிரதிவாதி தரப்பில் விசாரணையின் போது நிருபிக்க வேண்டும் என்ற குறிப்புடன் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.